Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

## திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தேர்வில் தங்கப்பதக்கம் பெற்று சண்முகா கல்லூரி மாணவர்கள் சாதனை

திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், இந்திய குடியரசுத் தலைவர் கலந்து கொண்டு சிறப்பித்தார். இவ்விழாவில், திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் ஐவர் முதலிடம் பெற்று, தங்கப்பதக்கம் வென்று பெருமை சேர்த்துள்ளனர். இம்மாணவர்களைக் கல்லூரியின் தலைவர் **ஜி.புல்லையா,** செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து,** பொருளாளர் **எம்.சீனுவாசன்,** கல்விப்புல முதன்மையர் **பேரா.அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்,** துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப்பணியாளர்கள், மாணவ மாணவியர் உள்ளிட்டோர் பாராட்டினர்.

சென்ற கல்வியாண்டில் நடைபெற்ற, திருவள்ளுவர் பல்கலைக்கழகத் தேர்வுகளில் திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி மாணவர்கள் முதலிடம் பெற்று, தங்கப்பதக்கம் வென்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு அதற்கான சான்றிதழ்களைப் பெற்றனர். பி.ஏ ஆங்கிலத்துறை மாணவர் **ஷபி R**, பி.எஸ்சி மென்பொருள் கணினி அறிவியல் துறை மாணவர் **சிவபிரகாஷ் S**, மின்னணுவியல் துறை மாணவர் **ராம்குமார் G**, பி.காம் (நிதி மற்றும் கணக்கியல்) மாணவி **காவியா R**, எம். எஸ்சி கணினி அறிவியல் துறை மாணவி **மஞ்சுளா B** உள்ளிட்ட இம்மாணவர்களை அனைவரும் பாராட்டினர்.

செயலர் மற்றும் தாளாளர்

